செ.வெ.எண்: 13 நாள்: 12.04.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் மையங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கு குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினையும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.04.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சட்டமன்ற பொதுத் தேர்தல்-2021 06.04.2021 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை நடைபெற்றது. பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் 9 வேட்பாளர்களும், குன்னம் சட்டமன்ற தொகுதியில் 22 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். பெரம்பலூர் மாவட்டத்தில் 816 இடங்களில் வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிவடைந்ததை தொடர்ந்து வாக்கு இயந்திரங்கள் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கு 40 மண்டல அலுவலர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு 35 மண்டல அலுவலர்கள் தலைமையில் உரிய பாதுகாப்பு வழிமுறைகளுடன் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கு குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்திற்கும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்திற்கும், உரிய பாதுகாப்புடன் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு பொதுப்பார்வையாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களின் முன்பாக வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறை மூடி முத்திரையிடப்பட்டு, மூன்றடுக்கு பாதுகாப்பு அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

147.பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குரும்பலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 103 சிசிடிவி கண்காணிப்பு கேமரா மூலமும், 148.குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேப்பூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 90 சிசிடிவி கண்காணிப்பு கேமரா மூலமும், என மொத்தம் 193 சிசடிவி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. சிசிடிவி கேமரா மூலம் பதிவான காட்சிகளை 24 மணி நேரமும் பார்வையிட்டு கண்காணிப்பதற்காக துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணித்து வருகின்றனர். மேலும் வேட்பாளர்களின் முகவர்களுக்கென தனி அறை ஏற்படுத்தப்பட்டு அந்த அறையில் சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கும் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி நிஷா பார்த்திபன் இ.கா.ப., பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி ஜெ.இ.பத்மஜா இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**